அரசமைப்பு உரிமைக் கல்வித் திட்டம்

Constitutional Rights Education

VAAN MUHIL

15, Kavitha Nagar, Maharaja Nagar Post, Tirunelveli – 627011, Tamil Nadu

# அரசமைப்பு உரிமைக் கல்வி மற்றக் குழந்தைகளுக்கான இரண்டாம் ஓவியத் திருவிழா 2022

**அன்பிற்கினிய நெறியாளர்களே,**

வணக்கம்.

**"உலக குழந்தை தொழிலாளர் எதிர்ப்பு தினம்"** வரும் **ஜூன் 12** அன்று உலகம் முழுவதும் அனுசரிக்கப்படுகிறது. தங்கள் அமைப்பு சார்பிலும் அனுசரிப்பீர்கள் என நம்புகிறோம். இந்த ஆண்டு “Universal Social Protection to End Child Labour" (குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிப்பதற்கான உலகளாவிய சமூகப் பாதுகாப்பு முறையை உருவாக்க வேண்டும்) என்ற பொருளை மையப்படுத்தி இதனை ஐக்கிய நாடுகள் அவை அனுசரிக்கிறது. மேலும் நிலைத்த வளர்ச்சிக்கான இலக்கு (SDG) 8.7 & 1.3 ஆகிய இரண்டு இலக்குகளை முன்னிலைப்படுத்த வேண்டும் என அறைகூவல் விடுத்துள்ளது.

## உலக குழந்தை தொழிலாளர் எதிர்ப்பு தினம் - SDG இலக்கு 8.7:

கட்டாய உழைப்பை ஒழிப்பதற்கும் (eradicate forced labour), நவீன அடிமைத்தனம் (end modern slavery) மற்றும் மனித கடத்தலுக்கு முற்றுப்புள்ளி (end human trafficking) வைப்பதற்கும், குழந்தைத் தொழிலாளர்களை ஆட்சேர்ப்பு செய்தல் மற்றும் பயன்படுத்துதல் மற்றும் 2025 ஆம் ஆண்டிற்குள் அதன் அனைத்து வடிவங்களிலும் குழந்தைத் தொழிலாளர்களை ஒழிப்பதற்கும், குழந்தைத் தொழிலாளர்களின் மோசமான வடிவங்களைத் தடைசெய்து அகற்றுவதற்கு உடனடி மற்றும் பயனுள்ள நடவடிக்கைகளை எடுத்திட வலியுறுத்துகிறது.

## இலக்கு 1.3:

தேசிய அளவில் பொருத்தமான சமூகப் பாதுகாப்பு முறைகள் மற்றும் அளவீடுகளை அனைவருக்கும் கிடைக்கும் வகையில் செயல்படுத்திட வேண்டும்.

குறிப்பாக, 2030க்குள் ஏழைகள் மற்றும் பாதிக்கப்படக்கூடியவர்களை சென்றடையும் வகையில் செயல்படுத்திட வேண்டும். (implement nationally appropriate social protection systems and measures for all, including floors, and by 2030 achieve substantial coverage of the poor and the vulnerable.)

## அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றக் குழந்தைகளுக்கான இரண்டாம் ஓவியத் திருவிழா:

நம்முடைய மன்றக் குழந்தைகள் பங்கேற்கும் வகையில், அவர்களை தொடர்ந்து உற்சாகப்படுத்தும் வகையில் “உலக குழந்தை தொழிலாளர் முறை எதிர்ப்பு தினத்தை மையமாகக் கொண்டு இரண்டாம் ஓவியத் திருவிழாவை” நாம் அனைவரும் இணைந்து முன்னெடுக்கிறோம். தங்கள் மன்றக் குழந்தைகள் இதில் பங்கெடுக்க அன்போடு அழைக்கிறோம்.

## விதிமுறைகள்:

1. **ஓவியத் தலைப்பு:**

   உலக குழந்தை தொழிலாளர் முறை எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு இந்த ஆண்டு கீழ்காணும் கருப்பொருள் (theme) அனுசரிக்கப்படுகிறது.

   - குழந்தை தொழிலாளர் முறை எதிர்ப்பு (against Child Labour)
   - கட்டாய உழைப்பு முறை ஒழிப்பு (Eradicate Forced Labour)
   - நவீன அடிமைத்தனம் (End modern slavery)
   - மனித கடத்தலுக்கு முற்றுப்புள்ளி வைத்தல் (End human trafficking)
   - சமூகப் பாதுகாப்பு முறைகள் (Social protection systems)

   ஆகிய பொருள்களில் ஏதேனும் ஒன்றினை தேர்வு செய்து ஓவியங்களைத் தீட்டலாம்.

2. **நாள்:** ஓவியம் வரைதலை வரும் 04.06.2022 முதல் 12.06.2022 வரை மேற்கொள்ளலாம்.
3. **இடம்:** மன்றம் செயல்படும் பகுதியிலேயே குழந்தைகள் அனைவரும் ஒன்றாக அமர்ந்து வரைவதற்கு ஏற்ற வெளிச்சமுள்ள இடத்தில் ஓவியம் தீட்டுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.
4. **மாநில அமைப்பிற்கு தகவல் அளித்தல்:** எந்தெந்த நாளில் இரண்டாம் ஓவியத் திருவிழா எங்கே நடைபெறுகிறது என்கிற விவரத்தை முறையாக மாநில

அமைப்பிற்கு தெரிவிக்க வேண்டும். வாட்ஸ்அப் குழு வாயிலாகவும் இதற்கென உருவாக்கப்படும் கூகுள் படிவம் மூலமாகவும் தெரிவிக்க வேண்டுகிறோம்.

5. **ஓவியம் வரைதல் முறை:** மன்றக் குழந்தைகள் தாங்கள் வரைய விரும்பும் ஓவியத்தை ஒரு சார்ட்டினை (Chart) நான்காக மடித்து அந்த அளவினை துண்டித்து அதில் வரைய வேண்டும். முழு அளவுள்ள சார்ட்டில் வரைய வேண்டாம். எந்த நிறம் கொண்ட சார்ட்டாக இருந்தாலும் பரவாயில்லை.
6. **ஓவியம் வரைபொருள்:** மன்றக் குழந்தைகள் தாங்கள் வரைய விரும்பும் ஓவியத்தை எவ்வித வகையிலான வண்ண நிற எழுதுபொருள் மூலமும் வரையலாம். அதில் கட்டுப்பாடு இல்லை. குறிப்பாக, குழந்தைகள் விரும்புகின்ற கிரயான்ஸ், ஸ்கெட்ச், கலர் பென்சில், வாட்டர் கலர் போன்றவை.
7. **யார் பங்கேற்கலாம்:** மன்றத்தில் உறுப்பினராக இணைந்துள்ள மன்றக் குழந்தைகள் அனைவரும் பங்கேற்க தகுதியானவர்கள்.
8. **ஓவியங்களை தேர்வு செய்யும் முறை:**
    - ஒவ்வொரு மன்றத்திலும் வரைந்த ஓவியங்களை அந்தந்த நெறியாளர்களிடம் இருந்து 13.06.2022க்குள் மாவட்டத் தொடர்பாளர் பெற்றிட வேண்டுகிறோம்.
    - பெறப்பட்ட ஓவியங்களை தங்கள் அமைப்பின் இயக்குனர் கவனத்திற்கு கொண்டு சென்று, ஒவ்வொரு மன்றத்தில் இருந்தும் சிறந்த ஒரு ஓவியத்தை தேர்வு செய்து (பத்து மன்றங்களுக்கும் சேர்த்து 10 ஓவியங்களை) 15.06.2022க்குள் வான்முகில், திருநெல்வேலி அமைப்பிற்கு தபால் மூலம் அனுப்பிட வேண்டுகிறோம்.
    - ஓவியங்கள் சேதமடைந்துவிடாமல், கசங்கிவிடாமல் அதனை பார்சல் செய்து அனுப்புவது அவசியம்.
    - ஓவியங்கள் அனைத்தையும் மன்ற வாரியாக ஒவ்வொன்றாக ஒளிப்படம் எடுத்து அதனை vmcrepriya@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு 15.06.2022க்குள் அனுப்புவது அவசியம். ஒவ்வொரு மன்றத்திலும் எந்தெந்த குழந்தைகள் ஓவியம் வரைந்தார்கள் என்ற பட்டியலையும் இணைத்து அனுப்புங்கள்.
9. **பங்கேற்புச் சான்றிதழ்:** இரண்டாம் ஓவியத்திருவிழாவில் பங்கு பெறும் குழந்தைகள் அனைவருக்கும் அரசமைப்பு உரிமைக்கல்வித்திட்டம் மூலமாக

பங்கேற்புச் சான்றிதழ் வழங்கப்படும். ஒவ்வொரு மன்றத்திலும் எந்தெந்த குழந்தைகள் ஓவியம் வரைந்தார்கள் என்ற பட்டியலின் அடிப்படையில் பங்கேற்புச் சான்றிதழ் வழங்கப்படும்.

10. **தேர்வு செய்யப்பட்ட சிறப்பு ஓவியத்தினை சட்டகம் செய்து வழங்குதல்:** தங்கள் அமைப்பு மூலம் தேர்வு செய்யப்பட்ட பத்து ஓவியங்கங்கள் (ஒரு மன்றத்திற்கு ஒன்று) முறையாக செழுமைப்படுத்தி சட்டகம் செய்து அது தங்கள் அமைப்பிற்கு 15.07.2022க்குள் அனுப்பி வைக்கப்படும். தேர்வு செய்யப்பட்ட ஓவியங்கள் அனைத்தும் ஒரு ஆவணமாக வான்முகில் அமைப்பு மூலமாக (நிதி வாய்ப்பினை பொறுத்து) வெளியீடு செய்யப்படும்.

11. **பொதுவானவை:**
    - மன்றத்தில் உள்ள அனைத்துக் குழந்தைகளையும் பங்கேற்க ஊக்கபடுத்துங்கள்.
    - குழந்தைகளுக்கு முன்கூட்டியே தகவல் தெரிவித்தல் அவசியம். எந்தவொரு மன்றக் குழந்தையையும் ஒதுக்கிவிட வேண்டாம்.
    - அறிவிக்கப்பட்ட நாட்களுக்குள் இரண்டாம் ஓவியத் திருவிழாவை அனைத்து மன்றங்களிலும் நடத்திட வேண்டும்.
    - குழந்தைகளுக்கு அறிவிக்கப்பட்ட தலைப்புகளை அவர்கள் மொழியில் புரியும் படி விளக்கிச் சொல்லுங்கள். அவர்களின் கற்பனை திறனுக்கு ஏற்ப ஓவியத்தை வரையலாம்.

---

**அரசமைப்பு உரிமைக் கல்வித் திட்டம்**

**வான்முகில்**